# 15 ஆயிரம் பள்ளி மாணவர்கள் மெட்ரோ ரயிலில் இலவச பயணம்

**சென்னை, செப். 5–**

மெட்ரோ ரயிலில், மூன்று மாதங்களில், மாநகராட்சி பள்ளிகளைச் சேர்ந்த, 15 ஆயிரம், மாணவ – மாணவியர் இலவச பயணம் அழைத்து செல்லப்பட்டுள்ளனர்.

மெட்ரோ ரயிலின் நவீன தொழில் நுட்பத்தை, பள்ளி மாணவர்கள் தெரிந்து கொள்ள ஏதுவாக, ஒவ்வொரு மாதமும், மாநகராட்சி பள்ளி, மாணவ – மாணவியர் மெட்ரோ ரயிலில், இலவச பயணம் அழைத்து செல்லப்படுகின்றனர்.

இப்பயணத்தில், நிலையங்களை சுற்றிப்பார்க்கவும், இயக்க தொழில் நுட்பம் மற்றும் செயல்பாடுகளை எளிதாக தெரிந்து கொள்ளவும், ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



மெட்ரோ ரயிலில், இலவச பயணமாக அழைத்துச் செல்லப்பட்ட, மாணவ – மாணவியர்.

விமான நிலையத்தில் இருந்து, கோயம்பேடு வழியாக, சென்ட்ரல் வரையும்; விமான நிலையத்தில் இருந்து, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., வரையும், இலவச பயணம் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

இப்பயணத்தில், மெட்ரோ ரயில் அதிகாரிகள், மாணவர்களிடம், மெட்ரோ ரயில் திட்ட செயல்பாடுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள நவீன தொழில்நுட்பம் குறித்த, அனைத்து தகவல்களையும் தெரிவிக்கின்றனர்.

இந்த இலவச பயணத்தில், ஜூன், 21ம் தேதியில் இருந்து, நேற்று வரை, 15 ஆயிரம் மாணவ – மாணவியர், மெட்ரோ ரயிலில் அழைத்து செல்லப்பட்டுள்ளனர்.